[1970 டிசம்பர் 2

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : பொதுவாக, இந்தத் தொழிற் பேட்டைகளில் தனியார்கள் தொழில்கள் துவங்க வராமல் ஏராள மான இடங்கள் காலியாக இருப்பதாக அறிகிறேன். ஆனல் திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் எஸ்டிமேட்ஸ் கமிட்டி வந்திருந்த நேரத்தில் இன்னும் அதிகமாக எங்களுக்கு இடங்கள் வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கின்றனர். அதையும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முன்னாலே, தொழிற்பேட்டைகளை சிலயிடங்களில் தொடங்கி அங்குதான் தொழில்களை தொடங்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதன் விளைவாக சில இடங்களில் தொழிற்பேட்டைகளுக்கு கிராக்கி இல்லாமல் இருந்தது. ஆனல் பலயிடங்களில் அதிகக் கிராக்கி இருந்தது. ஆகவே, இப் போது நம் அரசாங்கம் எடுத்திருக்கக்கூடிய புதிய முடிவு, எங்கெங்கு தொழில் அதிபர்கள் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வருகிறார் களோ அவர்களுக்கு ஹயர் பர்சஸ் திட்டம் என்ற முறையில் எந்த இடமாக இருந்தாலும் அங்கு தொழிற்பேட்டைகள் அமைத்துக் கொடுக்க ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.

மணியாச்சி ரயில் நிலையம்

* 95 வினா:—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணியாச்சி இரயில்வே ஸ்டேஷனின் பெயரை மாற்றி வாஞ்சிநாதன் இரயில்வே ஸ்டேஷன் என்று பெயர் வைக்கும்படியாக மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனின், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் காங்கிரஸ்காரர்கள் உட்பட எல்லாக் கட்சியினருமே இந்தப் பெயர் மாற்றம் வரவேண்டுமென்று கேட்டும் அவர்கள் கவனிக்காத இந்த வேலையை அரசியல் தியாகிகள் விஷயத்தில் பரிவு காட்டி வரக்கூடிய இந்த ஆட்சியாவது இந்த நாட்டின் விடுதலைக் காக வேண்டி தன் இன்னுயிரை தியாகம் செய்த பகத் சிங் பரம்பரையைச் சார்ந்த இந்த வாஞ்சிநாதன் பெயரை வைப்பதற்கு இனிமேலாவது முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி ஏற்கனவே இரண்டு தனிப்பட்ட நபர்கள், ஒருவர் வாஞ்சிநாதபுரம் என்று பெயர் வைக்க வேண்டுமென்றும், இன்னொருவர் வீரவாஞ்சி என்று பெயர் வைக்க வேண்டுமென்றுள்ள கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அதன் பேரில் அறிக்கை கேட்கப்பட்டது, போர்ட் ஆஃப் ரெவின்யூ மூலம் அறிக்கை கேட்கப்பட்டது. தற்போது இப்படி எந்த நட

வடிக்கையும் தேவை இல்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் உறுப்பினர் அவர்களின் கருத்திற்கேற்ப இதுபற்றி மறுபடியும் பரிசீலனை செய்யப்படும்.

திரு. டி. மார்டின்: தலைவர் அவர்களே, ஸ்டேஷன் பெயரை மாற்றுவது என்ற பிரச்னை இல்லாவிட்டாலும் இனிமேலாவது அது பற்றி பரிசீலனைக்கு எடுக்கப்படுகிற நேரத்தில், சமீபத்தில் மணியாச்சி ரெயில்வே நிலையத்திற்கு அருகில் ஒரு பெரிய ரெயில் கொள்ளை ஏற் பட்டு அதன் தொடர்பாக பெரிய போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் இப்போது அந்தப் பாதுகாப்பு இல்லாத முறையில் போக்குவரத்து சரிவர..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீர் முஹம்மது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: தலைவர் அவர்களே, ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்ற வீர வாலிபன் வாஞ்சிநாதன் பெயரை விரைவில் அந்த ஸ்டேனுக்கு வைப்பதற்கு அரசு முயற்சிக்கிற நேரத்தில் அவர் ஞாபகார்த்தமாக அவர் பெயர் பொறித்த ஒரு பெயர் பலகையாவது அங்கு இடம் பெறச் செய்ய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஸ்டேஷன் பெயரை மாற்றி வைப்பது பற்றிய கேள்வி. பெயர் பொறித்து வைக்கும் பிரச்னை அல்ல.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து ஆஷ் துரையை அந்த இடத்தில் வாஞ்சிநாத ஐயர் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். ஆனால் வாஞ்சி நாதனின் நினைவுச் சின்னம் தூத்துக்குடி நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிறது. இப்போது மணியாச்சி ரெயில்வே ஸ்டேஷனில் விரை வாக அவருக்கு ஒரு நினைவுச்சின்னத்தை ஏற்படுத்துவதற்கு அர சாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பிரச்னையாக இருப்பதால் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மணியாச்சி ஜங்ஷனுக்கு வாஞ்சி நாதன் அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று இருவர் எழுதி யிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இரு நபர்கள் யார்? அவர்களது பெயர்களைக் கூற முடியுமா? போர்ட் அதற்கு மறுப்பு அளித்துவிட்டது என்றும் சொன்னார்கள். அப்படி மறுப்பதற்கான காரணங்கள் என்ன? பெயர் மாற்றும் இந்த முயற்சியில் அரசாங்கம் விரைவில் ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒருவர் பெயர் கருப்ப பிள்ளை. இன்னொருவர் பெயர் பொன்னம்பலம்.

The Board had stated that there was no reason to act on a solitary representation in the matter. So, the Board has not favoured the proposal.